## மேலும் ரூ.5 லட்சம் சிக்கியது

பூந்தமல்லி, மார்ச்.24-
தேர்தல் பறக்கும் படை சோதனையில் ஏ.டி.எம். மையத்துக்கு கொண்டு சென்ற ரூ.57 லட்சம் உள்பட மொத்தம் ரூ.62 லட்சத்து 32 ஆயிரத்து 450 பறிமுதல் செய்யப்பட்டது.

### ஏ.டி.எம். மையத்துக்கு

நாடாளுமன்ற தேர்தலில் வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருட்கள் கொடுப்பதை தடுக்கும் விதமாக பூந்தமல்லி பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் பல்வேறு இடங்களில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி நேற்று பூந்தமல்லி அடுத்த புதுசத்திரம் பிரதான சாலையில் உரிய ஆவணங்கள் இன்றி திருத்தணியை சேர்ந்த ரமேஷ் என்பவர் காரில் கொண்டு சென்ற ரூ.57 லட்சத்தை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர். அந்த பணம் தனியார் வங்கி ஏ.டி.எம். மையத்துக்கு கொண்டு சென்றதாக கூறப்படுகிறது.

### ரூ.58½ லட்சம் பறிமுதல்

இதேபோல் பூந்தமல்லி அடுத்த சென்னீர்குப்பம் சந்திப்பில் பாலவாக்கத்தை சேர்ந்த ரமேஷ் காரில் உரிய ஆவணங்கள் இல்லாமல் வைத்திருந்த ரூ.73 ஆயிரத்து 450-ம், வேப்பம்பட்டு பகுதியில் உரிய ஆவணம் இல்லாமல் எடுத்துச் செல்லப்பட்ட ரூ.70 ஆயிரத்தையும் பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட மொத்தம் ரூ.58 லட்சத்து 43 ஆயிரத்து 450 பணத்தை தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் குழுவினர், மாவட்ட உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் கற்பகம், கூடுதல் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் கோவிந்தராஜ் ஆகியோரிடம் ஒப்படைத்தனர். அவர்கள் அந்த பணத்தை பூந்தமல்லியில் உள்ள அரசு கருவூலகத்தில் ஒப்படைத்தனர்.

### காசிமேடு

சென்னை புதுவண்ணாரப்பேட்டை எம்.டி.பி. மைதானம் அருகே பறக்கும் படை அதிகாரி பழனி தலைமையில் நடந்த சோதனையில் திருவொற்றியூர் வடக்கு மாட வீதி தெருவை சேர்ந்த சரவணன் (44) ஸ்கூட்டரில் ரூ.1 லட்சத்து 16 ஆயிரத்தை எடுத்து சென்றார். அவர் மளிகை பொருட்களை கடை கடையாக கொடுத்துவிட்டு பணம் வசூலித்து வருவதாக தெரிவித்தார். ஆனால் அதற்கான ஆவணங்கள் இல்லாததால் பணத்தை பறிமுதல் செய்தனர். அதேபோல் காசிமேடு எஸ் என் செட்டி தெருவில் நடத்தப்பட்ட சோதனையில் சென்னை பாலவாக்கம் அண்ணா சாலை ரேடியோ காலனியைச் சேர்ந்த அருணகிரி (58) திருவொற்றியூரில் உள்ள டிரான்ஸ்போர்ட் அலுவலகத்துக்கு வந்தபோது காரில் உரிய ஆவணங்கள் இன்றி வைத்திருந்த ரூ.78 ஆயிரத்தை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

### பெரவள்ளூர்

பெரவள்ளூர், ஜவகர் நகரில் நடந்த வாகன சோதனையில் மினி ஆட்டோவில் உரிய ஆவணம் இல்லாமல் ரூ.93 ஆயிரம் எடுத்து செல்வது தெரிந்தது. மினி ஆட்டோவில் வந்த அதே பகுதியைச் சேர்ந்த லோகேஷ் (41) தான் ஆன்லைன் மூலம் மளிகை பொருட்களை வாங்கி விற்ற பணத்தை கொண்டு செல்வதாக தெரிவித்தார். ஆனால் அதற்குரிய ஆவணங்கள் இல்லாததால் பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

கொளத்தூர் தில்லைநகர் அருகே வாகன சோதனையில் ஈடுபட்டு இருந்த தேர்தல் பறக்கும் படையினர் அந்த வழியாக வந்த மினி வேனை மறித்து சோதனை செய்தனர். அதில் வியாசர்பாடி சாஸ்திரி நகரைச் சேர்ந்த மீன் வியாபாரி இளமாறன் (39) மீன் வாங்குவதற்காக ரூ.1 லட்சத்து 2 ஆயிரத்துடன் சென்றார். ஆனால் அந்த பணத்துக்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் அதனை பறிமுதல் செய்து பெரம்பூர் கருவூலகத்தில் ஒப்படைத்தனர்.

சென்னை மற்றும் புறநகர் பகுதியில் தேர்தல் பறக்கும் படை சோதனையில் ஏ.டி.எம். மையத்துக்கு கொண்டு சென்ற ரூ.57 லட்சம் உள்பட மொத்தம் ரூ.62 லட்சத்து 32 ஆயிரத்து 450 பறிமுதல் செய்யப்பட்டது.

Rs 57 Lakhs wou seized by flying Squad the cash person is saying that the money is to, full the ATM centre

தினத்தந்தி
24 MAR 2024

### தேர்தல் பறக்கும் படை மூலம்

# இதுவரை ரூ.37.87 லட்சம் பறிமுதல்

## சென்னை மாநகராட்சி தகவல்

சென்னை, மார்ச்.24-
தமிழகத்தில் ஏப்ரல் 19-ந்தேதி ஒரே கட்டமாக நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலை முன்னிட்டு அனைத்து பகுதிகளிலும் பறக்கும் படை அதிகாரிகள் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்படும் பணம், தங்கம் உள்ளிட்ட பொருட்களை பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மொத்தம் 112 குழுக்கள் வாகன சோதனையில் ஈடுபட்டு வருகிறார்கள். 3 ஷிப்டு அடிப்படையிலும் கண்காணிப்பு மற்றும் சோதனை பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

கடந்த 17-ந்தேதி முதல் 22-ந்தேதி வரை உரிய ஆவணங்கள் இல்லாமல் எடுத்துச்செல்லப்பட்ட ரூ.33 லட்சத்து 69 ஆயிரத்தை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர். இதேபோல நேற்று ரூ.4 லட்சத்து 18 ஆயிரத்தை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர். அதன்படி, சென்னையில் மொத்தம் இதுவரை ரூ.37 லட்சத்து 87 ஆயிரம் தேர்தல் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

Rs 37.87 lakhs were seized by flying Squad

தினத்தந்தி

24 MAR 2024

# காடுவெட்டி குரு மகனிடம் ரூ.1 லட்சம் பறிமுதல்

கிருஷ்ணகிரி, மார்ச்.24-
கிருஷ்ணகிரியில் உள்ள திருவண்ணாமலை சாலை மேம்பாலம் அருகே தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக வந்த காரை நிறுத்தி சோதனை செய்தனர். அதில் உரிய ஆவணங்கள் இன்றி ரூ.1 லட்சம் கொண்டு சென்றது தெரியவந்தது. இதையடுத்து காரில் வந்தவரிடம் விசாரித்ததில் அவர் அரியலூர் மாவட்டம் உடையாம்பாளையம் காடுவெட்டி கிராமத்தை சேர்ந்த கனலரசு (வயது 22) என்பதும், அவர் உரிய ஆவணங்கள் இன்றி பணத்தை கொண்டு வந்ததும் தெரியவந்தது. இதையடுத்து ரூ.1 லட்சத்தை பறிமுதல் செய்த போலீசார் அதனை கிருஷ்ணகிரி உதவி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைத்தனர்.

இதற்கிடையே பணம் கொண்டு வந்த கனலரசு மறைந்த முன்னாள் வன்னியர் சங்க மாநில தலைவர் காடுவெட்டி குருவின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

Rs 1. Lakh was Seized by flying Squad from thiru Kaduvetti Guru
- Indian politician Son

தினமலர்
24 MAR 2024

# ரூ.11.41 கோடி பறிமுதல்

சென்னை, மார்ச் 24-
தமிழகத்தில், 11.41 கோடி ரூபாய் ரொக்கம் உட்பட, 13.22 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் பறிமுதல் செய்யப் பட்டுள்ளன.

லோக்சபா தேர் தலையொட்டி, தமிழகம் முழுதும் வாகன சோதனை நடத்தப்படுகிறது. உரிய ஆவணம் இல்லாமல் எடுத்து செல்லப்படும் பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப் படுகின்றன.

நேற்று வரை, 11.41 கோடி ரூபாய் ரொக்கம்; 76 லட்சம் ரூபாய் மதிப்புள்ள மதுபானங்கள்; 38 லட்சம் ரூபாய் மதிப் புள்ள, போதைப் பொருட்கள்; 22 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்கம், வெள்ளி நகைகள்; 44 லட்சம் ரூபாய் மதிப்புள்ள இல வசப் பொருட்கள் என, மொத்தம், 13.22 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட் கள் பறிமுதல் செய் யப்பட்டுள்ளன.

~~Rs 9.81~~ Rs 11.41 crore was seized by flying squad

தினமலர்
24 MAR 2024

# ஓட்டுச்சாவடிகளில் வி.ஐ.பி.,க்களுக்கு எழுந்து நின்று வணக்கம் சொல்ல தடை

கரூர், மார்ச் 24-- ஓட்டுச்சாவடி மையங்களுக்கு வரும், வி.ஐ.பி., க்களுக்கு எழுந்து நின்று வணக்கம் செலுத்துவது, சிறப்பு கவனிப்பு செய்வதை தவிர்க்க வேண்டும் என, ஓட்டுப்பதிவு அலுவலர்களுக்கு தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது.

லோக்சபா தேர்தலின் போது, ஓட்டுச்சாவடி மையங்களில் பணியாற்ற உள்ள, தலைமை தேர்தல் அலுவலர் மற்றும் துணை அலுவலர்கள், பாதுகாப்பு பணியில் ஈடுபடும் போலீசார் மற்றும் அரசியல் கட்சி பிரமுகர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை தேர்தல் ஆணையம் வகுத்துள்ளது.

## சிறப்பு கவனிப்பு கூடாது

அதில், ஓட்டுப்பதிவு அலுவலர் மற்றும் முகவர்கள் மொபைல் போனில் பேசுவது மற்றும் புகை பிடிப்பதை தவிர்க்க வேண்டும். ஓட்டுப்போட வரும் வி.ஐ.பி.,க்களுக்கு அலுவலர்கள் எழுந்து நின்று வணக்கம் செலுத்தக்கூடாது. சிறப்பு கவனிப்பு செய்யக்கூடாது.

ஓட்டுப்பதிவு இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டால், ஓட்டுச்சாவடி தலைமை அலுவலர், முகவர்கள் முன்னிலையில் சரி செய்ய வேண்டும்.

மதியம், 3:00 மணிக்கு மேல் அரசியல் கட்சி முகவர்களை வெளியே செல்லவோ, மீண்டும் உள்ளே வரவோ அனுமதிக்க கூடாது. முகவர்கள் அரசியல் விஷயங்களை பேசக் கூடாது.

பாதுகாப்பு பணியில் ஈடுபடும் போலீசார், ஓட்டுச்சாவடி தலைமை அலுவலர் அழைத்தால் மட்டும் உள்ளே செல்ல வேண்டும். பாதுகாப்பு இடத்தை விட்டு வேறு எங்கும் செல்லக்கூடாது. தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை அல்லது வாக்காளர் சிலிப் கொண்டு மட்டுமே ஓட்டு போட முடியும். பிற ஆவணங்களை அடையாளத்துக்கு பயன்படுத்த கூடாது.

## மை வைக்கும் முறை

வாக்காளர்களின் இடது கை ஆட்காட்டி விரலில் நகத்துக்கும், தோலுக்கும் மத்தியில் அழியாத மை வைக்க வேண்டும். இடது கையில் விரல்கள் இல்லாதபட்சத்தில், வலது ஆட்காட்டி விரலில் மை வைக்கலாம். அந்த விரலும் இல்லையென்றால், அதற்கடுத்த விரலில் மை வைக்கலாம்.

இரண்டு கைகளிலும் விரல்கள் இல்லாதவர்களுக்கு, இடது மணிக்கட்டில் மை வைக்கலாம். இரண்டு கைகளுமே இல்லாதவருக்கு, இடதுகால் விரலில் மை வைக்கலாம்.

ஓட்டுச்சாவடி மையம் வந்தும், ஓட்டு போட முடியாதவருக்கு, தலைமை அலுவலர் ஓட்டு போட உதவி செய்ய வேண்டும்.

இவ்வாறு தேர்தல் ஆணையம் தெரிவித்து உள்ளது.

It is not mandatory to standing up & saluting VIPs at polling booths.

தினமலர்

24 MAR 2024

# வாக்காளர் அட்டை இல்லையா? நீங்களும் ஓட்டு போடலாம்

**சென்னை, மார்ச் 24–**

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹு, வெளியிட்ட அறிவிப்பு:

- லோக்சபா தேர்தல் மற்றும் விளவங்கோடு சட்டசபை இடைத்தேர்தலில், வாக்காளர்கள் ஓட்டளிக்க செல்லும் போது, ஓட்டுச்சாவடியில் தங்கள் அடையாளத்தை மெய்ப்பிக்க, வாக்காளர் அட்டையை காண்பிக்க வேண்டும்
- அதை காண்பிக்க இயலாதவர்கள், ஆதார் அட்டை, தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணி அடையாள அட்டை, புகைப்படத்துடன் கூடிய வங்கி மற்றும் தபால் கணக்கு புத்தகங்கள், தொழிலாளர் நல அமைச்சக மருத்துவ காப்பீட்டு அட்டை போன்றவற்றை காண்பிக்கலாம்
- இதுதவிர, ஓட்டுனர் உரிமம், பான்கார்டு, தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ், இந்திய தலைமை பதிவாளரால் வழங்கப்பட்ட ஸ்மார்ட் அட்டை, பாஸ்போர்ட், புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், மத்திய, மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள், தொழிலாளர்களுக்கு வழங்கியுள்ள புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள், எம்.பி., – எம்.எல்.ஏ.,க்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை, மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட, இயலாமைக்கான தனித்துவமான அடையாள அட்டை போன்றவற்றில், ஏதேனும் ஒன்றை காண்பித்து ஓட்டளிக்கலாம்
- தேர்தல் கமிஷன் சார்பில் வழங்கப்படும், 'பூத் சிலிப்' அடையாள அட்டையாக ஏற்றுக் கொள்ளப்படாது. ஒரு தொகுதி வாக்காளர் பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை, வேறொரு தொகுதியில் அடையாள அட்டையாக காண்பிக்கலாம். ஆனால், அந்தத் தொகுதி வாக்காளர் பட்டியலில் வாக்காளர் பெயர் இடம் பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.

CEO, TN. Announce that the Voters Can Vote by providing their passport, pension book, Driving licence, Bank passbook Aadhaar card and any other govt Guarantee identify cards with Photo for elections.

தினமலர்

24 MAR 2024

# அரசு வாகனங்களை சோதனை செய்யுங்க

## தலைமை தேர்தல் அதிகாரியிடம் வலியுறுத்தல்

**அரசியல்வாதிகளை கைது செய்ய அவசியம் இருந்தால், தேர்தல் கமிஷன் அனுமதி பெற்று கைது செய்ய வேண்டும். தேர்தலையொட்டி கைது செய்வதை கண்டிக்கிறோம்**

**சென்னை, மார்ச் 24–** 'தேர்தல் அமைதியாக நடக்க, அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். அரசு வாகனங்களையும் சோதனை செய்ய வேண்டும். பூத் சிலிப்பை முழுமையாக வழங்க வேண்டும்' என, அரசியல் கட்சிகள் வலியுறுத்தி உள்ளன.

தேர்தல் நடத்தை விதிகளை அமல்படுத்துவது தொடர்பாக, தலைமை செயலகத்தில் நேற்று, தேர்தல் கமிஷன் சார்பில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் பங்கேற்ற ஆலோசனை கூட்டம் நடந்தது.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹு தலைமை வகித்தார். கூடுதல் தலைமை தேர்தல் அலுவலர் சங்கர்லால் குமாவத், இணை தலைமை தேர்தல் அலுவலர் ஸ்ரீகாந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அரசியல் கட்சி பிரதிநிதிகள் பல்வேறு சந்தேகங்களை எழுப்பினர். அவற்றுக்கு தலைமை தேர்தல் அதிகாரி பதில் அளித்தார்.

கூட்டம் முடிந்த பின், அதில் பங்கேற்றவர்கள் கூறியதாவது:

**தி.மு.க., – ஆர்.எஸ். பாரதி:** ஓட்டுச்சாவடியில் பெண்கள் சிரமப்படுவதை தவிர்க்க, கழிப்பறை வசதி செய்ய வேண்டும். விளம்பர விவகாரத்தில் பாரபட்சம் இன்றி செயல்பட வேண்டும்.

பணம் பிடிபட்டால், உரிய ஆவணங்களை சரி பார்த்து, பிடிபட்ட பணத்தை உடனடியாக திரும்ப வழங்க வேண்டும். தேர்தல் கமிஷனில் கொடுத்த புகார்கள் மீது, நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினோம்.

**அ.தி.மு.க., – முன்னாள் அமைச்சர் ஜெயகுமார்:** தேர்தல் அமைதியாக, நியாயமாக நடக்க வேண்டும். அகற்றப்படாமல் உள்ள ஆளுங்கட்சி சுவரொட்டி, பேனர்களை அகற்ற வேண்டும்.

ஆளுங்கட்சி உணவு கழக வாகனம் வழியே, பணம் எடுத்து செல்வதாக தகவல் வந்துள்ளது. அதை தடுக்க வேண்டும். சோதனை சாவடியில், தனியார் வாகனங்களை போல, அரசு வாகனங்களையும் சோதனைசெய்ய வேண்டும்.

**பா.ஜ., – கராத்தே தியாகராஜன்:** தேர்தல் கமிஷனின் மொபைல் செயலி சரியாக செயல்படவில்லை. எனவே, நேரடியாக மனு கொடுத்தாலும் அனுமதி வழங்க வேண்டும்.

வாகன சோதனையின் போது, ஒரு வாகனத்திற்கு, 50,000 ரூபாய் மட்டும் எடுத்து செல்லலாமா; வாகனத்தில் நான்கு பேர் இருந்தால், தலா 50,000 ரூபாய் எடுத்து செல்லலாமா என்று கேட்டோம்; சரியான விளக்கம் இல்லை. தேர்தல் நடத்தை விதியில், பிரதமருக்கு மட்டும் சில விதிவிலக்கு உள்ளது.

**காங்கிரஸ், வழக்கறிஞர் பிரிவு மாநில தலைவர் சந்திரமோகன்:** தேர்தல் அறிவித்த பின், அரசியல்வாதிகளை கைது செய்ய அவசியம் இருந்தால், தேர்தல் கமிஷன் அனுமதி பெற்று கைது செய்ய வேண்டும். தேர்தலையொட்டி கைது செய்வதை கண்டிக்கிறோம்.

**மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் – பீம்ராவ்:** பிரதமர் ராணுவ ஹெலிகாப்டரில் வருகிறார். அது மக்கள் வரிப் பணம். அதையும் வேட்பாளர் செலவு கணக்கில் சேர்க்கும்படி கூறினோம். தேர்தல் நேரத்தில், டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலை, அமலாக்கத்துறை கைது செய்தது தவறு என்று கூறியுள்ளோம். தேர்தல் கமிஷன் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும்.

**இந்திய கம்யூனிஸ்ட் – பெரியசாமி:** இண்டியா கூட்டணியை அடித்து நொறுக்க, மத்திய அரசு தன் அரசியல் அதிகாரங்களை பயன்படுத்துவது, மக்கள் இடையே பீதி ஏற்படுத்தும் நடவடிக்கை. அதை தடுக்க வேண்டும். பிரதமருக்கு மட்டும் சிறப்பு உரிமை என, சகல அதிகாரத்தை பயன்படுத்தும் சூழலை அனுமதிக்கக் கூடாது என்று தெரிவித்தோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

CEO, TN. instruct the Surveillance team ~~the~~ to check the government vehicles thoroughly

தினமலர்
24 MAR 2024

# ரூ.11.41 கோடி பறிமுதல்

**சென்னை, மார்ச் 24–**

தமிழகத்தில், 11.41 கோடி ரூபாய் ரொக்கம் உட்பட, 13.22 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் பறிமுதல் செய்யப் பட்டுள்ளன.

லோக்சபா தேர் தலையொட்டி, தமிழகம் முழுதும் வாகன சோதனை நடத்தப்படுகிறது. உரிய ஆவணம் இல்லாமல் எடுத்து செல்லப்படும் பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப் படுகின்றன.

நேற்று வரை, 11.41 கோடி ரூபாய் ரொக்கம்; 76 லட்சம் ரூபாய் மதிப்புள்ள மதுபானங்கள்; 38 லட்சம் ரூபாய் மதிப் புள்ள, போதைப் பொருட்கள்; 22 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்கம், வெள்ளி நகைகள்; 44 லட்சம் ரூபாய் மதிப்புள்ள இல வசப் பொருட்கள் என, மொத்தம், 13.22 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட் கள் பறிமுதல் செய் யப்பட்டுள்ளன.

Rs 11.41 Crores were seized by flying Squad.

தினமலர்
24 MAR 2024

**தேர்தல் பத்திரம்**

# உச்ச நீதிமன்ற மேற்பார்வையில் சிறப்பு விசாரணை குழு: காங்.,

புதுடில்லி, மார்ச் 24–

''ரத்து செய்யப்பட்ட தேர்தல் பத்திர திட்டம் தொடர்பாக, உச்ச நீதிமன்ற மேற்பார்வையில் சிறப்பு விசாரணைக் குழு விசாரணை நடத்தப்பட வேண்டும்,'' என, காங்கிரஸ் பொதுச்செயலர் ஜெய்ராம் ரமேஷ் வலியுறுத்தி உள்ளார்.

தேர்தல் பத்திர திட்டத்தை, பிரதமர் மோடி அரசு 2018ல் அமல்படுத்தியது. இத்திட்டத்தின் படி, தனிநபர் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்கள், தாங்கள் விரும்பும் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்கலாம்.



**நன்கொடை**

இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், கடந்த மாதம் தீர்ப்பு அளித்த உச்ச நீதிமன்றம், தேர்தல் பத்திர திட்டத்தை ரத்து செய்தது. மேலும், அத்திட்டம் தொடர்பான அனைத்து தகவல்களையும் அளிக்கும்படி, எஸ்.பி.ஐ., வங்கிக்கு உத்தரவிடப்பட்டது.

இதன்படி, அனைத்து விபரங்களையும் தேர்தல் கமிஷனில் எஸ்.பி.ஐ., சமர்ப்பித்தது. அதில், பா.ஜ., – திரிணமுல் காங்., – காங்., ஆகிய மூன்று கட்சிகள், தேர்தல் பத்திர திட்டம் வாயிலாக அதிக நன்கொடை பெற்றது தெரிய வந்தது.

இந்நிலையில், டில்லியில் செய்தியாளர்களிடம் காங்., பொதுச்செயலர் ஜெய்ராம் ரமேஷ் நேற்று கூறியதாவது:

கருப்பு பணத்தை மீட்பதாக உறுதியளித்த பிரதமர் மோடி, தேர்தல் பத்திரங்கள் வாயிலாக ஊழலை சட்டப்பூர்வமாக்கினார். மேலும் அதை மறைக்க தீவிரமாக முயற்சி செய்து வருகிறார்.

தேர்தல் பத்திரங்களின் விபரங்களை தொகுக்க பல மாதங்களாகும் என, எஸ்.பி.ஐ., பொய் கூறியது. இத்தகவல்களை நாங்கள் வெறும் 15 வினாடிகளில் தொகுத்து விட்டோம்.

'பிரீபெய்டு, போஸ்ட் பெய்டு, ரெய்டுக்கு பின் மிரட்டி பணம் பறித்தல், பினாமி நிறுவனங்கள்' என, நான்கு வழிகளில் பா.ஜ.,. தேர்தல் பத்திரங்கள் வாயிலாக நன்கொடை பெற்றுள்ளது.

அமலாக்கத்துறை – சி.பி.ஐ., – வருமான வரித்துறை உள்ளிட்டவை, 56 முறை, 41 கார்ப்பரேட் நிறுவனங்களில் சோதனை நடத்தியுள்ளன. இதன் பின், பா.ஜ.,வுக்கு 2,592 கோடி ரூபாய் அந்நிறுவனங்களால் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் 1,853 கோடி ரூபாய், சோதனைகளுக்கு பின் அளிக்கப்பட்டுள்ளது.

**வலியுறுத்தல்**

தேர்தல் பத்திர முறைகேடு குறித்து, உச்ச நீதிமன்ற மேற்பார்வையில் சிறப்பு விசாரணைக் குழு விசாரணை நடத்தப்பட வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகிறோம்.

வரும் தேர்தலில் வெற்றி பெற்று, 'இண்டியா' கூட்டணி ஆட்சிக்கு வந்தால், அதானி விவகாரத்தில் பார்லி., கூட்டுக் குழு விசாரணை நடத்தப்படும். மேலும், பி.எம்.கேர்ஸ் நிதி குறித்து ஆராய, சிறப்பு விசாரணைக் குழு அமைக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

The Congress General Secretary Jai Ram Ramesh Request Supreme Court to setup a Special team should be investigated under the Supreme court supervision.

தினமலர்
24 MAR 2024

# வாகன சோதனையில் சிக்கிய மலேஷிய கரன்சி, பாஸ்போர்ட்

அம்பத்துார், மார்ச் 24–

சென்னை ஆவடி சட்டசபை தொகுதி கண்காணிப்பு குழுவினர், நேற்று அதிகாலை, 1:30 மணி அளவில், அம்பத்துார், சோழபுரம் பிரதான சாலையில் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது, 'அமேஸ்' ரக சொகுசு காரை, சோதனைக்காக நிறுத்தினர். ஆனால், அந்த கார் நிற்காமல் சென்றது. அதையடுத்து, காரை விரட்டிப் பிடித்து சோதனையிட்டனர். அதில், உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு வரப்பட்ட, 58,000 ரூபாய் மதிப்புள்ள மலேஷிய நாட்டு பணம், 13 மலேஷிய பாஸ்போர்ட், இரண்டு இந்திய பாஸ்போர்ட்கள் சிக்கின.



அம்பத்துாரில், வாகன சோதனையில் சிக்கிய மலேஷியா, இந்தியா பாஸ்போர்ட்டுகள்.

காரை ஓட்டி வந்த திருமுல்லைவாயல், ஸ்ரீநகர் காலனி, ஆதி சங்கரி தெருவை சேர்ந்த ஜின்ஷோ, 41, என்பவரிடம் இது தொடர்பாக விசாரிக்கின்றனர்.

கொளத்துார், தில்லை நகர் முதல் பிரதான சாலையில் ராஜேந்திரன் தலைமையிலான தேர்தல் பறக்கும் படையினர், வியாசர்பாடியை சேர்ந்த இளமாறன், 39, என்பவரின் மினி லாரியை சோதனையிட்டபோது, 1,03,200 ரூபாய் இருந்தது. காசிமேடில் மொத்தமாக மீன் வாங்கி வந்து சில்லரை வியாபாரம் செய்து வரும் இவர், வசூலான பணத்தை தகுந்த ஆவணமின்றி கொண்டு சென்ற போது சிக்கியுள்ளார். கைப்பற்றப்பட்ட பணம், பெரம்பூர் கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது.

பெரவள்ளூர் ஜவஹர் நகரில் நடந்த சோதனையில், லோகேஷ், 41, என்பவர் ஓட்டி வந்த டாடா ஏஸ் மினி வேனில் 93,310 ரூபாய் இருந்தது கண்டறிந்து கைப்பற்றப்பட்டது.

பூந்தமல்லி அருகே சென்னீர்குப்பம் பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் நேற்று, பாலவாக்கம் பகுதியை சேர்ந்த ரமேஷ் என்பவரின் காரை மடக்கி சோதனை செய்தனர்.

இதில் உரிய ஆவணம் இல்லாமல் எடுத்து சென்ற 73,000 ரூபாயை அதிகாரிகள் பறிமுதல் செய்து அரசு கருவூலத்தில் ஒப்படைத்தனர்.

Malaysian currency, passports were seized by the surveillance team.

தினகரன்
24 MAR 2024

### பறக்கும்படை சோதனையில் சிக்கியது

# ₹10.8 கோடி தங்கம், வெள்ளி பறிமுதல்

ராசிபுரம், மார்ச் 24: நாமக்கல், திண்டுக்கல் மற்றும் குமரி மாவட்டத்தில் உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு வரப்பட்ட ₹10.8 கோடி மதிப்புள்ள தங்க, வெள்ளி நகைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அருகே, சேலம்-நாமக்கல் தேசிய நெடுஞ்சாலையில் மல்லூர் பிரிவு சோதனைச் சாவடி அருகே, தேர்தல் பறக்கும்படை அதிகாரிகள், நேற்று காலை வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, சேலத்திலிருந்து வந்த தனியார் கொரியர் சர்வீஸ் வாகனத்தை நிறுத்தி சோதனையிட்டனர். அதில், 3 சாக்குமூட்டைகளில் 39 நகைபெட்டிகள் இருந்தன. இதையடுத்து, உரிய ஆவணங்கள் இல்லாததால் ₹6.2 கோடி மதிப்பிலான 29 கிலோ நகைகளை, அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில்- திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில் புலியூர்குறிச்சி பகுதியில் பறக்கும் படையினர் நேற்று முன்தினம் இரவு சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக வந்த வேனை நிறுத்தி சோதனை செய்தனர். அதில், உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட இரண்டரை கிலோ தங்க நகைகளும், 4 கிலோ வெள்ளி நகைகளையும் பறிமுதல் செய்தனர். இதன் மதிப்பு ₹1.50 கோடி இருக்கும் என கூறப்படுகிறது.

இதேபோல் திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டுவில் மெயின் ரோட்டில் உள்ள சோதனை சாவடியில் தேர்தல் நிலை கண்காணிப்பு குழுவினர் நேற்று முன்தினம் இரவு வாகன சோதனை நடத்தினர். அப்போது தேனியில் இருந்து வத்தலக்குண்டு நோக்கி வந்த வந்த வேனை மறித்து சோதனை செய்தனர். வேனில் 9 பெட்டிகளில் தங்க நகைகள் இருந்ததும், அதற்கு உரிய ஆவணம் இல்லாததும் தெரியவந்தது. இதையடுத்து நகைகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டது. இதன் மதிப்பு ₹3.9 கோடி இருக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து நகைகளும் அந்தந்த மாவட்ட கருவூலத்தில் பறக்கும் படை அதிகரிகள் ஒப்படைத்தனர்.

### பிடிபட்ட சீல் வைத்த கன்டெய்னர் லாரி

தூத்துக்குடி மாவட்டம் ஏரல் தாலுகாவிற்கு உட்பட்ட திருக்கோளூர் ரயில்வே கேட் அருகே பறக்கும் படையினர், நேற்று காலையில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த கன்டெய்னர் லாரியை தடுத்து நிறுத்தினர். கன்டெய்னருக்கு சீல் வைக்கப்பட்டிருந்த நிலையில், அதனை திறக்குமாறு அதிகாரிகள் கூறினர். ஆனால் லாரியை ஓட்டி வந்த டிரைவர் ராஜகோபால், கன்டெய்னரில் ஆன்லைன் நிறுவனத்தின் பொருட்கள் மட்டுமே உள்ளது.

சீல் வைக்கப்பட்டு இருப்பதால் திறக்க முடியாது. கோவையில் இருந்து இங்கு வரும் வரை 9 இடங்களில் சோதனை நடைபெற்று உள்ளதாக தெரிவித்தார். இதனை ஏற்க மறுத்த பறக்கும்படையினர், கன்டெய்னரை திறந்து பார்க்காமல் அனுப்ப முடியாது எனக் கூறி லாரியை நிறுத்தி வைத்தனர். இதையடுத்து சம்பந்தப்பட்ட ஆன்லைன் நிறுவனத்தின் பணியாளர் ஒருவர் சுமார் 40 நிமிடங்களுக்கு பிறகு வந்து சீல் வைக்கப்பட்ட கன்டெய்னரை திறந்தார். உள்ளே இருந்த ஆன்லைன் பொருட்களையும், அதற்கான ஆவணங்களையும் சோதனையிட்ட பிறகு அதிகாரிகள் லாரியை அனுப்பி வைத்தனர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

gold worth of Rs 10.8 crore were seized by flying squad

தினகரன்
2 4 MAR 2024

தேர்தல் தொடர்பான விளம்பரங்களை

# மெட்ரோ, வந்தே பாரத் ரயில்களில் இருந்து அகற்ற வேண்டும்



சென்னை தலைமை செயலகத்தில், நாடாளுமன்ற தேர்தலை அமைதியாக நடத்துவது குறித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி தலைவர்களுடன் தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு நேற்று ஆலோசனை நடத்தினார்.

Advertisements should be removed from Metro, & Vande Bharat trains.

தினகரன்

2 4 MAR 2024

# உரிய ஆவணமில்லாத ₹61.23 லட்சம் பறிமுதல்

சென்னை, மார்ச் 24: பூந்தமல்லி அருகே புதுசத்திரம் பிரதான சாலையில் நேற்று முன்தினம் இரவு நிலை கண்காணிப்பு குழு அலுவலர் முரளி தலைமையில் பறக்கும்படை போலீசார், வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது, அவ்வழியே வந்த காரை நிறுத்தி சோதனை செய்தபோது, அதில், ₹57 லட்சம் இருந்துள்ளது. விசாரணையில், திருத்தணியை சேர்ந்த ரமேஷ் என்பவர், உரிய ஆவணம் இல்லாமல் பணத்தை எடுத்துச் சென்றது தெரிந்தது. அதனால், அந்த பணத்தை பறிமுதல் செய்தனர்.

இதேபோல் பூந்தமல்லி அடுத்த சென்னீர்குப்பம் சந்திப்பில் பறக்கும் படையினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டபோது, அந்த வழியாக வந்த பாலவாக்கத்தைச் சேர்ந்த ரமேஷ் என்பவரின் காரை சோதனை செய்ததில் உரிய ஆவணங்களின்றி இருந்த ₹73 ஆயிரத்து 450 பறிமுதல் செய்யப்பட்டது.

மொத்தம் ₹57 லட்சத்து 73 ஆயிரத்தை பூந்தமல்லி தாலுகா அலுவலகத்தில் மாவட்ட உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் கற்பகம், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் கோவிந்தராஜ ஆகியோர் முன்னிலையில் அரசு கருவூலத்தில் செலுத்தினர்.

பெரம்பூர்: கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாதவரம் நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு தேர்தல் பறக்கும் படை அதிகாரி தேவதாஸ், எஸ்ஐ கீதா உள்ளிட்டோர் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியாக வந்த இருசக்கர வாகனத்தை மடக்கி சோதனை செய்தபோது, அதில் ₹57 ஆயிரம் இருந்தது. வாகனத்தை ஓட்டி



வந்த மாதவரம் ரோஜா நகரை சேர்ந்த கோடீஸ்வர ராவ் (55) என்பவரிடம் விசாரணை நடத்திய போது, அந்த பணத்திற்கான உரிய ஆவணம் இல்லை. இதனால், தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் அந்த பணத்தை பறிமுதல் செய்து, புரசைவாக்கத்தில் உள்ள கருவூலத்தில் ஒப்படைத்தனர்.

மற்றொரு சம்பவம்: கீழ்ப்பாக்கம் கார்டன் சாலையில் தேர்தல் பறக்கும் படை அதிகாரி கார்த்திகேயன் தலைமையில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டபோது, எழும்பூரில் இருந்து வந்த கார் ஒன்றை மடக்கி சோதனை செய்தனர். அதில் உரிய ஆவணமின்றி எடுத்துவரப்பட்ட ₹1 லட்சம் இருந்தது. அதை கொண்டுவந்த அம்பத்தூர் அத்திப்பட்டு பகுதியை சேர்ந்த அசன் முகமது (38) என்பவரிடம் விசாரித்த போது, அவரது மனைவி 8 மாத கர்ப்பிணியாக உள்ளதால் மருத்துவமனைக்கு செல்வதற்காக பணத்தை கொண்டு வந்தது தெரிய வந்தது. ஆனால், அதற்கான ஆவணம் இல்லாததால் பணத்தை பறிமுதல் செய்து, பெரம்பூர் கிளை கருவூலத்தில் ஒப்படைத்தனர்.

● கொளத்தூர் தில்லை நகர் முதல் தெருவில் நேற்று பறக்கும் படை அதிகாரி ராமச்சந்திரன் தலைமையில் எஸ்ஐ மோகன்தாஸ் உள்ளிட்டோர் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, அவ்வழியாக வந்த லாரி ஒன்றை மடக்கி சோதனை செய்தபோது, ₹1 லட்சம் இருந்தது. விசாரணையில், வியாசர்பாடி சாஸ்திரி நகர் 9வது தெருவை சேர்ந்த இளமாறன் (39) உரிய ஆவணமின்றி பணத்தை எடுத்து சென்றது தெரிந்தது. அதை பறிமுதல் செய்து, பெரம்பூர் கருவூலத்தில் ஒப்படைத்தனர்.

இதேபோல், பெரவள்ளூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட ஜவகர் நகர் முதல் தெருவில் நேற்று பறக்கும் படை அதிகாரி ராஜேந்திரன் தலைமையில் போலீசார் வாகன சோதனை செய்தபோது அவ்வழியாக வந்த மினி வேன் ஒன்றை மடக்கி சோதனை செய்தனர். அதில் ₹93 ஆயிரம் இருப்பது தெரியவந்தது. விசாரணையில், பெரவள்ளூர் எஸ்.ஆர்.பி கோயில் தெருவை சேர்ந்த லோகேஷ் (41) என்பவர் உரிய ஆவணமின்றி பணத்தை எடுத்து சென்றது தெரிந்தது. அதை பறிமுதல் செய்து, பெரம்பூர் கருவூலத்தில் ஒப்படைத்தனர்.

Rs 61.23 Lakhs were seized by Flying Squad.

தினகரன்

24 MAR 2024

வாக்களிப்பதற்கு முன்னர் அடையாளத்தை மெய்ப்பிக்க

# வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க வேண்டும்

## இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவு

சென்னை, மார்ச் 24: வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள அனைத்து வாக்காளர்களும், அவர்கள் வாக்களிப்பதற்கு முன்னர், வாக்குச்சாவடியில் தங்கள் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க வேண்டும் என்று இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து தமிழ்நாடு தேர்தல் ஆணையம் வெளியிட்ட அறிக்கையில்: 2024-ம் ஆண்டிற்கான நாடாளுமன்ற பொதுத் தேர்தல் மற்றும் விளவங்கோடு சட்டமன்றப் பேரவைக்கான இடைத் தேர்தலில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள அனைத்து வாக்காளர்களும், அவர்கள் வாக்களிப்பதற்கு முன்னர், வாக்குச்சாவடியில் தங்கள் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க இயலாத வாக்காளர்கள், அவர்களின் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக பின்வரும் மாற்று புகைப்பட அடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை காண்பிக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் ஆணையிட்டுள்ளது. ஆதார் அட்டை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அடையாள அட்டை, புகைப்படத்துடன் கூடிய வங்கி, அஞ்சலக கணக்குப் புத்தகங்கள், தொழிலாளர் நல அமைச்சகத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு அட்டை, ஓட்டுநர் உரிமம், வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை, தேசிய மக்கள் தொகை பதிவேட்டின்கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட ஸ்மார்ட் அட்டை, இந்திய கடவுச் சீட்டு, புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், மத்திய, மாநில அரசுகள், பொதுத் துறை நிறுவனங்கள், வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள், பாராளுமன்ற, சட்டமன்ற, சட்ட மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை, இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட இயலாமைக்கான தனித்துவமான அடையாள அட்டை.

வாக்காளர் பட்டியலில் வாக்காளரின் வரிசை எண்ணை அறிந்து கொள்வதற்காக புகைப்பட வாக்காளர் சீட்டிற்கு பதிலாக வாக்காளர் தகவல் சீட்டினை அச்சிட்டு வழங்க இந்திய தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது. வாக்காளர் தகவல் சீட்டில் வாக்குச் சாவடியின் பெயர், வாக்குப்பதிவு நாள், நேரம் போன்றவை இடம் பெற்றிருக்கும். மாவட்ட தேர்தல் அலுவலரால் வாக்குப் பதிவு நாளுக்கு ஐந்து நாட்களுக்கு முன்னர் அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்காளர் தகவல் சீட்டு விநியோகிக்கப்படும். வாக்குச் சாவடியில் வாக்காளர் தகவல் சீட்டு அடையாளத்தை மெய்ப்பிப்பதற்கான ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்படாது.

ஒரு வாக்காளர் வேறொரு சட்டமன்றத் தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை வைத்திருப்பாரேயானால் அந்த அடையாள அட்டையையும் இந்திய தேர்தல் ஆணையம் காட்டும் ஆவணமாகப் பயன்படுத்தலாம். ஆனால் அந்த வாக்காளருடைய பெயர் அந்த வாக்குச் சாவடிக்குரிய வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும். வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை அல்லது இந்திய தேர்தல் ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட மேற்கூறிய எந்த ஒரு அடையாள ஆவணம் வைத்திருப்பதால் மட்டுமே ஒரு வாக்காளர் தனது வாக்கைச் செலுத்தி விட முடியாது. அவருடைய பெயர் வாக்குச் சாவடிக்கு அனுப்பப்பட்ட வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தால் மட்டுமே அவர் வாக்குரிமையைச் செலுத்த தகுதியுடையவர் ஆவார் என்று தெளிவுபடுத்தப்படுகிறது.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றுள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள், அவர்களின் கடவுச்சீட்டிலுள்ள விவரங்களை அடிப்படையாகக் கொண்டு, அவர்களின் அசல் கடவுச்சீட்டின் அடிப்படையில் மட்டுமே அவர்களின் அடையாளம் வாக்குச்சாவடியில் மெய்ப்பிக்கப்பட வேண்டும்.

CEO, TN Announce that the voters can vote by providing their passport, pensionbook, Driving licence, Bank passbooks Aadhaar Card and any other Govt guarantee identity cards with photo for election.

தினகரன்

24 MAR 2024

### தமிழகம் முழுவதும்

# பறக்கும் படையினரால் ₹13.22 கோடி பறிமுதல்

சென்னை, மார்ச் 24: மக்களவை தேர்தல் கடந்த 16ம் தேதி அறிவிக்கப்பட்டதையடுத்து தமிழகத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளது. இதன் காரணமாக அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், மாநில அரசு என அனைத்து தரப்பினருக்கும் கடுமையான கட்டுப்பாட்டுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் தமிழகம் முழுவதும் கண்காணிப்பு பணியில் 700க்கும் மேற்பட்ட பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆவணமின்றி ₹50 ஆயிரத்துக்கும் மேல் எடுத்துச் சென்றால் பணத்தை பறிமுதல் செய்யும் நடவடிக்கையில் பறக்கும் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி 8 வது நாளான நேற்று காலை 9 மணி நிலவரப்படி ₹11.41 கோடி ரொக்க பணமும், மதுபான வகைகள் ₹76 லட்சம், போதை பொருள் வகைகள் ₹38 லட்சம், தங்கம், வெள்ளி மற்றும் பரிசு பொருட்கள் ₹66 லட்சம் என கடந்த 8 நாட்களில் ₹13.22 கோடி வரை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

Rs 9.81 crore were seized by flying squad in overall tamil Nadu

தினகரன்

24 MAR 2024

## பறக்கும்படையினர் வாகன சோதனை



▶ நாடாளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து, நடத்தை விதிகள் அமலில் இருப்பதால் ஆவணங்கள் இன்றி பணம், பரிசு பொருட்கள் எடுத்து செல்வதை தடுக்கும் வகையில் பறக்கும்படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். அந்தவகையில், திருத்தணி அடுத்த பொன்பாடி சோதனை சாவடியில் ஒரு காரை நிறுத்தி போலீசார் உதவியுடன் சோதனை செய்யும் அதிகாரிகள்.

Conducting deep surveillance to prevent money & gift distribution to the voters by flying squad teams.

தினகரன்

24 MAR 2024

வேளச்சேரியில் அனுமதியின்றி அறிமுக கூட்டம்

# அதிமுக வேட்பாளர் உட்பட இருவர் மீது வழக்கு பதிவு

வேளச்சேரி, மார்ச் 24: வேளச்சேரியில் அனுமதியின்றி வேட்பாளர் அறிமுக கூட்டம் நடத்திய அதிமுக வேட்பாளர் ஜெயவர்தன் மற்றும் மண்டப உரிமையாளர் ஆகியோர் மீது தரமணி போலீசார் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

நாடாளுமன்ற தேர்தல் முன்னிட்டு தமிழகத்தில் அரசியல் களம் சூடுபிடித்துள்ளது. கூட்டணியில் கட்சிகளை இணைத்தல், தொகுதிப் பங்கீடு, வேட்பாளர்கள் அறிவிப்பு, தேர்தல் அறிக்கை; பிரசார பொதுக்கூட்டம் என அரசியல் கட்சிகள் தேர்தல் களத்தில் செயல்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தென் சென்னை நாடாளுமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் ஜெயவர்தன் அறிமுக கூட்டம், வேளச்சேரி காந்தி சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நேற்று நடந்தது. இதற்கு, தேர்தல் ஆணையத்திடம் அனுமதி பெறாததால், தகவலறிந்து வந்த தேர்தல் கண்காணிப்பு நிலைக்குழு அதிகாரிகள், அனுமதியின்றி கூட்டம் நடத்தக்கூடாது, என்று தெரிவித்தும், தொடர்ந்து வேட்பாளர் அறிமுக கூட்டம் நடந்தது. இதுதொடர்பாக, தரமணி காவல் நிலையத்தில் தேர்தல் கண்காணிப்பு நிலைக்குழு அதிகாரிகள் புகார் அளித்தனர். அதன்பேரில், தென் சென்னை நாடாளுமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் மருத்துவர் ஜெயவர்தன், மண்டப உரிமையாளர் பாலாஜி ஆகியோர் மீது வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

Case registered against ADMK candidate for conducting a meeting without permission

ினகரன்
24 MAR 2024

## வாக்குச்சாவடிகள் தயார்




நாடாளுமன்ற தேர்தலையொட்டி சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள அலுவலகத்தில், வாக்குப்பதிவு இயந்திரங்களை சரிபார்க்கும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். 2வது படம்: பாரிமுனை பாரதி மகளிர் கல்லூரியில் வாக்காளர்களுக்கான வழிகாட்டி பலகைகள் தயார் செய்யப்படுகிறது. 3வது படம்: பள்ளிக்கரணை அரசு மேல்நிலைப் பள்ளி நுழைவாயிலில் வாக்குச்சாவடி எண் விவரங்கள் எழுதப்படுகிறது. 4வது படம்: எழும்பூர் நெடுஞ்சாலையில் வாக்குச்சாவடி மையம் அருகில் உள்ளது என பெயின்ட் மூலம் எழுதப்படுகிறது.

Election offices are working for Election preparedness.

தினமணி
24 MAR 2024

# ஆவணங்கள் இன்றி வேனில் கொண்டு சென்ற ரூ.96 லட்சம் பறிமுதல்

ஆவடி, மார்ச் 23: பூந்தமல்லியில் உரிய ஆவணங்கள் இன்றி வேனில் கொண்டு செல்லப்பட்ட ரூ. 96 லட்சத்தை தேர்தல் நிலையான கண்காணிப்பு குழு அதிகாரிகள் சனிக்கிழமை பறிமுதல் செய்தனர்.

பூந்தமல்லி சட்டப்பேரவைத் தொகுதியில் நிலையான கண்காணிப்பு குழு அதிகாரிகள் சனிக்கிழமை பூந்தமல்லி அருகே புதுச்சத்திரம் பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக வந்த வேனை வழிமறித்து சோதனை நடத்தியதில், அதில் கட்டு கட்டாக ரூபாய் நோட்டுகள் இருந்தது தெரியவந்தது. அந்த பணத்துக்கு வேனில் வந்த தனியார் நிறுவன ஊழியர்களிடம் உரிய ஆவணங்கள் இல்லை.

இதையடுத்து, கண்காணிப்புக் குழு அதிகாரிகள் வேனில் இருந்த ரூ. 95,93,900 பணத்தை பறிமுதல் செய்தனர். பின்னர் அதிகாரிகள் அந்த பணத்தை பூந்தமல்லி வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட உதவி தேர்தல் நடத்தும் அலுவலரும், மாவட்ட வருவாய் கோட்டாட்சியருமான கற்பகத்திடம் ஒப்படைத்தனர். பின்னர், அவர் அந்த பணத்தை பூந்தமல்லி கருவூலத்தில் செலுத்தினார்.



பறிமுதல் செய்யப்பட்ட பணத்தைப் பார்வையிட்ட மாவட்ட உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் கற்பகம்.

உரிய ஆவணங்களை செலுத்தி பணத்தை பெற்றுக் கொள்ளுமாறு தேர்தல் அதிகாரிகள் அறிவுறுத்தினர்.

**வெளிநாட்டு பணம், கடவுச்சீட்டு பறிமுதல்...** ஆவடி அருகே திருமுல்லைவாயல், சிடிஎச் சாலையில் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் வெள்ளிக்கிழமை நள்ளிரவு வாகன சோதனை ஈடுபட்டபோது, அந்த வழியாக வந்த காரை அதிகாரிகள் நிறுத்த முயன்றபோது, ஓட்டுநர் காரை நிறுத்தாமல் அம்பத்தூர் நோக்கி வேகமாகச் சென்றார். இதையடுத்து, பறக்கும் படை அதிகாரிகள் காரை விரட்டிச் சென்று அம்பத்தூரில் மடக்கிப் பிடித்தனர். பின்னர், காரை சோதனை செய்தபோது, மலேசியா நாட்டின் பணமான ரிங்கட், 15 கடவுச் சீட்டுகள், இந்திய பணம் ரூ. 9,000 ஆகியவை இருந்தது தெரியவந்தது.

இந்த பணத்துக்கு காரில் வந்த நபர்களிடம் உரிய ஆவணங்கள் இல்லை. இதையடுத்து, பறக்கும் படை அதிகாரிகள் அவற்றைப் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்த மலேசிய நாட்டு பணத்தின் இந்திய மதிப்பு ரூ. 58,000 ஆகும். இதையடுத்து கடவுச்சீட்டுகளை அம்பத்தூர் காவல் நிலையத்திலும், பணத்தை ஆவடி தொகுதி கூடுதல் உதவி தேர்தல் அலுவலர் விஜயகுமாரிடமும் ஒப்படைத்தனர்.

96 lakhs were seized by Flying Squad.

தினமணி

24 MAR 2024

# தேர்தல் விதிமுறை மீறல்: அதிமுக வேட்பாளர் ஜெயவர்தன் மீது வழக்கு

**சென்னை, மார்ச் 23:** சென்னை வேளச்சேரியில் தேர்தல் விதிமுறைகளை மீறியதாக அதிமுக வேட்பாளர் ஜெ. ஜெயவர்தன் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

வேளச்சேரி, காந்தி சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் அதிமுக சார்பில் தென் சென்னை மக்களவைத் தொகுதி வேட்பாளர் அறிமுகக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தென் சென்னை அதிமுக வேட்பாளர் ஜெயவர்தன் கலந்து கொண்டார். இந்தக் கூட்டத்துக்கு

அதிமுக நிர்வாகிகள், தேர்தல் ஆணையத்திடம் முறைப்படி அனுமதி பெறவில்லை எனக் கூறப்படுகிறது. மேலும், தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளை மீறி, அந்தப் பகுதியில் பொதுமக்களுக்கு இடையூறாக கொடி, பேனர் வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தகவலறிந்த தென் சென்னை மக்களவைத் தொகுதி கண்காணிப்பு நிலைக்குழு அதிகாரி, அங்கு சென்று எச்சரித்தும் அதிமுக நிர்வாகிகள் கூட்டத்தை நடத்தியுள்ளனர். இது தொடர்பாக தேர்தல் ஆணையம் சார்பில் தரமணி காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. அதன்பேரில், அதிமுக தென் சென்னை வேட்பாளர் ஜெயவர்தன் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்து, விசாரித்து வருகின்றனர்.

Case registered against ADMK Candidate for conducting a meeting without permission from T.N.EC

தினமணி
24 MAR 2024

# வாக்களிக்க வரையறுக்கப்பட்டுள்ள 13 அடையாள ஆவணங்கள் எவை?

சென்னை, மார்ச் 23: மக்களவைத் தேர்தலில் வாக்களிக்க வரையறுக்கப்பட்டுள்ள அடையாள ஆவணங்கள் எவையெவை என தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சனிக்கிழமை அவர் வெளியிட்ட செய்தி: கடந்த தேர்தல்களைப் போலவே, வரும் மக்களவைத் தேர்தலிலும் புகைப்பட வாக்காளர் அடையாள அட்டையுடன் சேர்த்து, மொத்தம் 13 வகையான ஆவணங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

அதன்படி, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அடையாள அட்டை, புகைப்படத்துடன் கூடிய வங்கி / அஞ்சலக கணக்குப் புத்தகங்கள், தொழிலாளர் நல அமைச்சகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டு அட்டை, ஓட்டுநர் உரிமம், வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை (பான் அட்டை), தேசிய மக்கள்தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட ஸ்மார்ட் அட்டை, இந்திய கடவுச்சீட்டு, புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், மத்திய, மாநில அரசுகள், பொதுத் துறை நிறுவனங்கள், வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள், மக்களவை, சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை, மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட தனித்துவமான அடையாள அட்டை ஆகியவற்றின் அசல் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை எடுத்து வந்து வாக்கினைச் செலுத்தலாம்.

**பெயர் இருந்தால்தான் வாக்களிக்கலாம்:** அடையாள அட்டை இருப்பதால் மட்டும் வாக்கைச் செலுத்தி விட முடியாது. வாக்காளர் பட்டியலில் பெயர் இருக்க வேண்டும். இருந்தால் மட்டுமே வாக்களிக்க முடியும்.

வாக்காளர் பட்டியலில் வாக்காளரின் வரிசை எண்ணை அறிந்து கொள்வதற்காக புகைப்பட வாக்காளர் சீட்டுக்குப் பதிலாக வாக்காளர் தகவல் சீட்டை அச்சிட்டு வழங்க இந்திய தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது. வாக்காளர் தகவல் சீட்டில் வாக்குச் சாவடியின் பெயர், வாக்குப் பதிவு நாள், நேரம் போன்றவை இடம்பெற்றிருக்கும்.

மாவட்ட தேர்தல் அலுவலரால் வாக்குப் பதிவு நாளுக்கு ஐந்து நாள்களுக்கு முன்பாக அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்காளர் தகவல் சீட்டு விநியோகிக்கப்படும். வாக்குச் சாவடியில் வாக்காளர் தகவல் சீட்டைக் காண்பித்து வாக்களிக்க முடியாது. அது அடையாள ஆவணம் இல்லை.

ஒரு வாக்காளர் வேறொரு சட்டப்பேரவைத் தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை வைத்திருக்கலாம். அந்த அடையாள அட்டையையும் இந்திய தேர்தல் ஆணையத்தின் அடையாள ஆவணமாகப் பயன்படுத்தலாம். ஆனால், அந்த வாக்காளருடைய பெயர் வாக்களிக்கச் செல்லும் வாக்குச் சாவடிக்குரிய வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

CEO TN Announce that the voters can vote by providing their govt guarantee 16 identity cards like passport, pension book, Driving licence, Bank passbooks, Aadhaar card and any ~~among~~ identity cards with photo for cast their vote.

முரசொலி
24 MAR 2024




தலைமைச் செயலகத்தில் நேற்று (23.03.2024) தலைமைத் தேர்தல் அதிகாரி / அரசு முதன்மை செயலாளர் சத்யபிரத சாகு, தலைமையில், மக்களவை பொதுத் தேர்தல் 2024 தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைத் தேர்தல் அலுவலர் சங்கர் லால் குமாவத், இணை தலைமைத் தேர்தல் அலுவலர் எச்.எஸ்.ஸ்ரீகாந்த் மற்றும் தேர்தல் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

CEO, TN Conducted an all parites meething yesterday (23.03.2024)

தினமணி
24 MAR 2024

# வாக்குச் சாவடிகளில் அடிப்படை வசதிகள்

## அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கோரிக்கை




மக்களவைத் தேர்தல் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தலைமைச் செயலகத்தில் சனிக்கிழமை ஆலோசனை நடத்திய தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு. உடன், கூடுதல் தலைமைத் தேர்தல் அதிகாரி சங்கர் லால் குமாவத், இணை தலைமைத் தேர்தல் அதிகாரி எச்.எஸ் ஸ்ரீகாந்த், தேர்தல் துறை உயர் அலுவலர்கள் உள்ளிட்டோர்.

சென்னை, மார்ச் 23: வாக்குச் சாவடிகளில் குடிநீர் உள்பட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகுவிடம், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்துவது தொடர்பாக, தமிழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் சனிக்கிழமை ஆலோசனை நடத்தப்பட்டது. தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தாங்கள் தெரிவித்த கருத்துகள் குறித்து செய்தியாளர்களிடம் கட்சிகளின் நிர்வாகிகள் கூறியது:

**திமுக அமைப்புச் செயலர் ஆர்.எஸ்.பாரதி:** தபால் வாக்குகள் யாருக்கெல்லாம் அளிக்கப்படவுள்ளன என்ற விவரங்களைத் தெளிவுபடுத்த வேண்டும். வாக்குச் சாவடிகளில் நிழற்குடை, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தர வேண்டும். குறிப்பாக, பெண் வாக்காளர்களுக்கு கழிப்பறை வசதிகளை அமைக்க வேண்டும். மெட்ரோ, வந்தேபாரத் ரயில்களில் மத்திய அரசின் விளம்பரங்கள் தொடர்கின்றன. அவற்றை அகற்ற வேண்டும். வாகனச் சோதனைகளின் போது பொதுமக்களை துன்புறுத்தக் கூடாது.

**அதிமுக முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார்:** 85 வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள், மாற்றுத்திறனாளிகளைச் சரியான முறையில் கண்டறிந்து அவர்களது வாக்குகளை இல்லங்களுக்கே சென்று பெற வேண்டும். அவர்கள் சுதந்திரமாக வாக்களிக்க வழிசெய்ய வேண்டும். ஆளும்கட்சியின் போஸ்டர்கள், சுவரொட்டிகளை விருப்பு வெறுப்பின்றி அகற்ற வேண்டும். 68,000-க்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகளில் கண்காணிப்பு கேமராக்கள் வைக்க வேண்டும். மின்னணு முறையில் பணப்பரிமாற்றத்தைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தனியார் வாகனங்கள் மட்டுமின்றி அரசு வாகனங்களையும் தீவிர சோதனைக்கு உட்படுத்த வேண்டும். மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களைப் பாதுகாப்பான முறையில் எடுத்துச் செல்வதுடன், பழுதை நீக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். வாக்குச் சாவடிகளில் குடிநீர், நிழற்குடை, இயற்கை உபாதைகளை கழிக்க வசதிகளை ஏற்படுத்த வேண்டும். நாங்கள் அளிக்கக் கூடிய புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தேமுதிக வழக்குரைஞர் அணி துணைச் செயலர் ஜி.சந்தோஷ்குமார்:** வாகன சோதனைகளின்போது வாகன ஓட்டிகளை அச்சுறுத்தக் கூடாது. புதிய வாக்காளர்கள் அதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ளதால் வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். எனவே, வாக்குச் சாவடிகள் அமைவிடங்களைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். அவற்றில் போதுமான அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும்.

**இந்திய கம்யூனிஸ்ட் மாநில துணைச் செயலர் பெரியசாமி:** வாக்குச் சாவடிகளில் வாக்காளர்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டும். கோவையில் பிரதமர் பிரசாரத்தில் பள்ளிச் சிறுவர்களை ஈடுபடுத்தியது குறித்து புகார் தெரிவித்துள்ளோம். மருத்துவர்கள், செவிலியர்கள், பட்ட மேற்படிப்பு மாணவர்கள் உள்பட இன்றியமையாத சேவையில் இருப்போருக்கு தபால் வாக்கு அளிக்கப்பட வேண்டும்.

**இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் வழக்குரைஞர் மாநிலத் தலைவர் சந்திரமோகன், இணைச் செயலர் நவாஸ் கா**[illegible]: வாகன சோதனையின்போது ரொக்கப் பணம் பறிமுதல் செய்யப்பட்டால் 48 மணி நேரத்துக்குள் திருப்பிக் கொடுக்க வேண்டும். அரசியல் கட்சித் தலைவர்களைக் கைது செய்ய தேர்தல் ஆணையத்தின் அனுமதியைப் பெற வேண்டும். வாக்குச் சாவடிகளில் குடிநீர், மருத்துவக் குழு உள்பட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும்.

**பாஜக மாநிலச் செயலர் கராத்தே தியாகராஜன்:** ஒரு வேட்பாளர் வாகனத்தில் செல்லும்போது, ரூ. 50,000 வரை ஆவணங்கள் இல்லாமல் எடுத்துச் செல்லலாம். அதேசமயம், ஒரு வாகனத்தில் நான்கைந்து நபர்கள் செல்லும்போது, அவர்கள் தலா ரூ. 50 ஆயிரத்தை எடுத்துச் செல்லலாமா? கூடாதா? என்ற தெளிவு இல்லை. அதை விளக்க வேண்டுமென கேட்டுள்ளோம். வாகனங்களுக்கான அனுமதியைப் பெற விண்ணப்பம் அளிக்கும் நடைமுறைக்கு கைப்பேசி செயலியை மட்டும் பயன்படுத்தாமல் நேரிலும் அளித்து பெற்றுக்கொள்ள வழிசெய்ய வேண்டுமென கேட்டுள்ளோம்.

**மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முன்னாள் எம்எல்ஏ பீம்ராவ்:** தேர்தல் நேரம் வெயில் காலம் என்பதால் வாக்குச் சாவடிகளில் மருத்துவக் குழுவை நியமிக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும். 40 முதல் 50 சதவீதம் அளவுக்கு மட்டுமே வீடு வீடாக வாக்குச் சாவடி சீட்டுகள் அளிக்கப்படுகின்றன. இதை விடுத்து முழுமையான அளவுக்கு வழங்க வேண்டும். வெறுப்புப் பேச்சுகள் தொடர்பாக நேரடியாக வழக்குப் பதிவு செய்ய வேண்டும்.

Political parties Request CEO, TN. for Basic facilites at polling booths.

தினமணி
24 MAR 2024

# 100% வாக்குப் பதிவு: யோகாசனம் மூலம் விழிப்புணர்வு

சென்னை, மார்ச் 23: சென்னை மாநகராட்சி பூங்காவில் எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பது குறித்து யோகாசனம் மூலம் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, வாக்காளர்கள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிப்பது குறித்து பள்ளி, கல்லூரிகள், பூங்காக்கள், வீடுதோறும் சென்றும் துண்டுப் பிரசுரங்கள் வழங்கி பொதுமக்களிடையே சனிக்கிழமை விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதில், மயிலாப்பூர் நாகேஸ்வரராவ் பூங்காவில் மாணவர்கள் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து பதாகைகள் மூலமும், விருகம்பாக்கம் சட்டப்பேரவை தொகுதிக்குள்பட்ட சிவன் பூங்காவில் யோகாசனம் செய்தும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

கோடம்பாக்கம், அன்னை வேளாங்கண்ணி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் 200 மாணவிகள் கலந்து கொண்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அனைவரும் வாக்காளர் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

முன்னதாக, டி.ஜி.வைணவ கல்லூரி, பச்சையப்பா கல்லூரி, வள்ளியம்மாள் கல்லூரி, சென்னை பள்ளிகளில் வெள்ளிக்கிழமை மாணவர்களிடையே கட்டுரை, ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில், தேர்தல் எழுத்தறிவுக் கழகத்தின் சார்பில் மாணவர்களுக்கு தேர்தல் நடைமுறைகள் குறித்து மாதிரி வாக்குப்பதிவு நடத்தப்பட்டு செய்முறை மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, 100 சதவீதம் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை பொதுமக்களுக்கு உணர்த்தும் வகையில் விருகம்பாக்கம் சிவன் பூங்காவில் சனிக்கிழமை யோகாசனம் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்தியவர்கள்.

Awareness through yoga to Ensure 100% Vote.